# ‘‘யாதும் வேண்டும், ஆண், பெண்ணுக்கு சரிநிகராக!’’

## சமத்துவ உலகே, தகுதிமிக்க உலகு!



**எஸ். மணிகண்டன்,**
தலைவர், **TNEBEF**

**ஒ**ரு மான்குட்டியைப் போல, குழந்தைப் பருவத்தில்
வீட்டைச் சுற்றித் துள்ளி விளையாடி வந்த ஒரு சிறுமி,
ஏன் வளர வளர அமைதியாகி தயக்கத்துடனும்
பதட்டத்துடனும் அடி வைத்து நடக்கிறாள்?

இந்த இயல்பான உணர்வுள்ள சுதந்திரமான பெண், வளர வளரப் படிப்படியாக இயல்புக்கு மாறானவளாக, உணர்விழந்த, துணிவற்ற நபராக ஏன் மாறிப் போகிறாள்? புகழ்பெற்ற பிரெஞ்சு நாவலாசிரியரும், எழுத்தாளரும் பெண்ணியச் சிந்தனை யாளருமான சிமோன் டி பவார் பின்வருமாறு எழுதியுள்ளார்.

‘‘ஒருவர் பெண்ணாகப் பிறப்பதில்லை: மாறாது
அவ்வாறு மாற்றப்படுகிறார்’’

அவர் மிகச் சரியாகக் கூறியுள்ளார். நமது சமூக அமைப்பு முறைதான் அவருடைய இந்த மாற்றத்திற்கு காரணமாக இருக்கிறது.

பிறப்பில் ஒரு குழந்தை, அது பெண்ணாக இருந்தாலும், ஆணாக இருந்தாலும், ஒரு குழந்தைதான்!

அவர்களுடைய குழந்தைப் பருவ நடவடிக்கைகளில் எந்த வேறுபாடும் இருப்பதில்லை. அழுவது, உணவு உண்பது, பருகுவது என்று எதிலும் வேறுபாடு இருப்பதில்லை.

ஆனால் ஏன்? பெண் மட்டும் இந்தப் பாகுபாட்டால் பாதிக்கப்படுகிறாள்? சமுதாயத்தில் அவளுக்கு ஏன் ஓர் இரண்டாம் அந்தஸ்தே அளிக்கப்படுகிறது?

குழந்தை பிறந்த உடனேயே, அது குடும்பம் மற்றும் சமுதாயத்தின் தாக்கத்தைப் பெறத் துவங்கி விடுகிறது. ஒரு ஆணும்,

பெண்ணும் பிறப்பிலிருந்தே வேறுபட்ட வகையில் வளர்க்கப்படு கிறார்கள். பெரும்பாலான குடும்பங்களில் உணவு, பானம், உடைகள், கல்வி இன்னபிற பெற்றிட ஆணுக்கு முன்னுரிமைகள் அளிக்கப்படுகின்றன. அதன் விளைவாகவே அவளுடைய ஆளுமை படிப்படியாகத் துணிவற்றதாக ஆகிறது. பெண்ணின் அக உலகம் படிப்படியாகக் கட்டுப்படுத்தப்பட்டு, அவள் சமையல றைக்குள்ளும், குடும்பத்துக்குள்ளும் குறுக்கப்பட்டு, படிப்படியாக பெண் குழந்தை ‘பெண்ணாக’ ஆகிறது.

ஒரு பெண் தனக்குச் சொந்தமாக, சுதந்திரமான அடை யாளத்தைப் பெற முடிவதில்லை. அவர் எப்போதும் யாரோ ஒருவரின் தாயாகவோ, மனைவியாகவோ, மகளாகவோதான் அடையாளப்படுத்தப்படுகிறாள்.

அவளுடைய குடும்பமே அவளுக்கு எல்லாமுமாக இருக்கிறது. அவளுடைய இன்பங்களும், துன்பங்களும் இந்த எல்லைக்குள்ளேயே முடக்கப்படுகின்றன.

இதை ஒரு இலட்சியக் குடும்பம் என்று நாம் கூற முடியுமா? அதை ஆதரிப்பது என்பது அதற்குள் உள்ளார்ந்திருக்கும் ஏற்றத் தாழ்வையும் எதேச்சதிகாரத்தையும் ஆதரிப்பது அல்லவா?

ஒருமுறை சுவாமி விவேகானந்தர் இவ்வாறு கூறினார்: இந்தியாவில் இரண்டு பெரிய தீமைகள் இருக்கின்றன. ஒன்று: பெண்ணைக் காலின் கீழ் நசுக்குதல் இரண்டு: ஜாதி வேற்றுமை மூலம் ஏழைகளைக் கசக்கிப் பிழிதல்.

குடும்பத்தின் இப்போதைய வடிவம் எப்போதும் இருந்து வந்ததல்ல என்பதை வரலாறு நமக்குக் கூறுகிறது. மனித சமுதாய வளர்ச்சியின் தொடக்கக் கட்டங்களில், சமூக அமைப்புமுறை பெண்கள் மேலாதிக்கம் பெற்றிருந்த நிலையில் இருந்தது. ஒரு பெண்ணே குடும்பத்தின் தலைவியாக இருந்தாள். அங்கு ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையில் எந்தப் பாகுபாடும் இருக்கவில்லை. வீட்டு வேலையிலும், வெளி வேலையிலும் இருவரும் சமமாகப் பங்கேற்றார்கள். பின்னர் ஒரு கட்டத்தில் தனிச் சொத்துரிமை வந்த பிறகுதான், ஆண்கள் படிப்படியாக வெளிவேலையில் ஏகபோகம் செலுத்தினார்கள். பெண்கள் வீட்டு வேலையுடன் கட்டுப்படுத்தப்பட்டவர்களாக ஆனார்கள்.

**‘‘நான் பெண்ணாய்ப் பிறந்திருந்தால் பெண்களெல்லாம் தம் கைப்பாவைகள் என்று ஆண்களிடையே நிலவும் கட்டுக்கதையை எதிர்த்துப் புரட்சி செய்வேன்’’** என்று கூறுகிறார் மகாத்மா காந்தி.

அண்மைக் காலங்களில் பல பெண்பிள்ளைகள் சமுதாயத்தால் அவர்களுக்கென்று வார்க்கப்பட்டதை உடைக்க முயற்சி செய்து வருகிறார்கள். அவர்கள் பையன்களை விடவும் எந்த வகையிலும் தகுதி குறைவானவர்கள் அல்ல என்பதற்குக் கிடைக்கும் மிகக் குறைந்த வாய்ப்புகளையும் பற்றிக் கொள்கிறார்கள்.

ஏராளமான பெண்கள் வீடுகளை விட்டு வெளியே வந்து வேலைகளில் சேர்ந்து பணியாற்றி வருகிறார்கள். பலர் அவர்களுடைய பணிகளில் கணிசமான வெற்றிகளையும் ஈட்டி வருகிறார்கள். ஒரு பெண் சமுதாயத்தில் புகழ்பெற்று முன்னணிக்கு வந்த பின்பும்கூட சமுதாயம் அங்கீகரிப்பதில்லை. ஆனால், இதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் பல பெண்கள் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

இந்தியாவின் மிக முக்கியமான தொழிலதிபர்களில் ஒருவர் இன்ஃபோஸிஸ் நாராயணமூர்த்தி. அவருடைய மனைவி சுதாமூர்த்தி, முதன் முதலில் டாடா நிறுவனத்தில் வேலைக்கு விண்ணப்பித்த விஷயம் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

டாடா நிறுவனத்தில் பொறியாளர் வேலைக்கு விளம்பரம் கொடுத்திருந்தார்கள். அதற்குப் பெண்கள் விண்ணப்பிக்க வேண்டாம் என்றும் குறிப்பிட்டு இருந்தார்கள். பெண்கள் ஏன் விண்ணப்பிக்கக் கூடாது? என்று கோபப்பட்டார் இளம்பெண் சுதா. தன் விண்ணப்பத்தை அனுப்பினார். கூடவே, டாடா போன்ற ஒரு நிறுவனம், பெண்ணை இரண்டாம்பட்சமாக நினைத்து ஒதுக்குவது மனவருத்தம் அளிக்கிறது என்று குறிப்பிட்டார்.

விண்ணப்பத்தைப் பார்த்த டாடா நிர்வாகம் வியந்து போனது. விஷயம் ரத்தன் டாடா வரை கொண்டு போகப்பட்டது. நேராக ரத்தன் டாடாவைச் சந்திக்க சுதா அழைக்கப்பட்டார். நேர்முகத் தேர்வில் தேறினார். அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரைக் கையில் வாங்கினார். டாடா நிறுவனத்தில் வேலை பார்த்த முதல் பெண்மணி என்ற பெயரையும் பெற்றார்.

ஜெயிக்க வேண்டும் என்று தீர்மானித்துவிட்ட பெண்களுக்கு வானமே எல்லை.

முதலில், பெண்கள் ஆண்களுடன் சமத்துவத்தை அடைவதற்கு, வீட்டு வேலையை 'உற்பத்தித் திறனற்ற' வேலையாக மதிப்பிடாமல், 'உற்பத்தித்திறன் கொண்ட வெளிப்புற வேலையுடன் சமமாக மதிப்பிடுகிற ஒரு சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும். அத்தகைய ஒரு சமுதாயம்! தான் குழந்தை பெறுகிற, பெண்களின் இயற்கையான திறமையை உற்பத்தியின் ஒரு இன்றியமையாத பகுதியாகக் கருதி, அதற்கு உரிய அந்தஸ்தையும் அங்கீகாரத்தையும் அளிக்கும்.

ஒரு பெண் சுய சார்புள்ளவளாகவும், சுதந்திரமானவளாகவும் ஆக விரும்பினால், அவள் பொருளாதார ரீதியாக சுதந்திரமானவளாக ஆக வேண்டியது முதலாவது நடவடிக்கையாக இருக்க வேண்டும். இந்த முதலாவது நடவடிக்கையை எடுப்பதில் வீட்டுக்கு வெளியே ஒரு சிறிய வேலையாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதுவே உண்மையில் ஓர் இராட்சத அடி வைப்பாக இருக்கும். அது அவளுடைய ஆளுமையில் ஒரு தீர்மானகரமான தாக்கத்தை ஏற்படுத்தும். ஏனென்றால் அவள் இப்போது சொந்தமாக முடிவுகளை எடுப்பது சாத்தியமாகிறது. அவள் வேலை செய்யும் இடத்தில் புதிய மனிதர்களைச் சந்திக்கிறாள். அவர்களுடன் விவாதத்தில் ஈடுபடுகிறாள். அதன்மூலம் அவளுடைய பார்வை விசாலமாகி உலகை இன்னும் நன்றாகப் புரிந்து கொள்கிறாள். அவளுக்குப் புதிய தொடர்புகள் கிடைக்கின்றன, சிலர் நெருக்கமான நண்பர்களாக ஆகின்றனர். அவர்களுடன் அவள் தனது இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்கிறாள். அவள் சமூகரீதியாக ஆக்கப் பூர்வமான பணிக்குப் பங்களிக்கத் தொடங்குகிறாள். இது அவளை சமுதாயத்தின் ஒரு பயனுள்ள உறுப்பினராக இருக்கும் உணர்வை அளிக்கிறது.

பெண்கள் விடுதலையை ஆண்களை ஒழிப்பதன் மூலம் அடைந்துவிட முடியாது. **ஆண்களும் பெண்களும் ஒருவர் மற்றவரின் அடையாளத்தையும் கன்னியத்தையும் மதிப்பதன் மூலம்** பாலின சமத்துவத்தை நிறுவும்போதுதான் இந்தக் குறிக்கோளை அடைய முடியும். பெண்கள் விடுதலை இயக்கத்தின் உண்மையான

எதிரிகள் ஆண்களல்ல. மாறாக ஆணாதிக்க மனோபாவம் மற்றும் ஆணாதிக்கத்தை பலப்படுத்துவதற்கு நிறுவப்பட்டுள்ள சடங்குகள், சாத்திரங்கள், பாரம்பரியங்கள் ஆகியவைதாம்.

இந்த ஆண்டு 'உலக மகளிர் தின கோஷமாக, ''யாதும் வேண்டும், ஆண், பெண்ணுக்கு சரிநிகராக!'' (Each for Equal) என்ற எழுச்சி வாசகங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப, ஒரு மனிதா பிமானமுள்ளதும், நியாயமானதுமான ஒரு சமுதாயம், அதன் மக்கள் தொகையின் மற்றொரு பாதியான பெண்கள், சுதந்திரமானவர்களாக இருக்கும்போதுதான் நிலவ முடியும். நன்கு கல்வி கற்ற தன்னம் பிக்கையுள்ள, அனைத்தையும் பற்றி நன்றாக அறிந்து கொண்டுள்ள, பண்பாடுள்ள ஒரு தாய், மற்றும் சுதந்திரமான ஆளுமை கொண்ட ஒரு தாய் மட்டுமே ஒரு குழந்தையை நன்றாக வளர்க்க முடியும்.

பெண்கள், உண்மையான மனிதப்பிறவிகளாக வாழ்வதற்குரிய ஒரு நியாயமான சமுதாயத்தை உருவாக்க நாம் ஒன்றுபட்டுப் போராட வேண்டும். வாருங்கள்! ஒன்றுபடுங்கள்! பெண்கள் ஒருவருக் கொருவர் எதிரியல்ல, நண்பர்களே! உண்மையான நண்பர்களே! என்பதை நிரூபியுங்கள்.

''நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோமனக் கும்மியடி!
ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்.
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்
மாட்டையடித்து வதக்கித் தொழுவத்தில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டுவந்தே
வீட்டினில் எம்மிடம் காட்ட வந்தார். அதை
வெட்டி விட்டோமென்று கும்மியடி!''

– மகாகவிபாரதி

**உலக மகளிர் தின நல்வாழ்த்துகளுடன்...**

தோழமையுடன்,

**சு. மணிகண்டன்**

# பெண்ணின் முன்னேற்றமும், பெருமையும்



எம். பாரதி, மாநிலச் செயலாளர், மகளிரணி

அரிதரிது மானிடர் ஆதல் அரிது. அதனினும் இப்பூவுலகில் பெண்ணாய் பிறத்தல் அரிது.

உடலுறுதி கொண்ட ஆணைவிட மனவுறுதி கொண்ட பெண் சிறப்பு மிக்கவள். தாயாக, மகளாக, மனைவியாக மற்றும் சகோதரியாக என வாழ்வின் அனைத்து நிலைகளிலும் நிறைந்து இருப்பவள் பெண்.

பெண்களின் பெருமைகளை பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே அறிந்து கொள்ளலாம்.

சங்ககாலத்தில் பெண்கள் புலவராகவும், தவப்பெண்ணாகவும் வாழ்ந்த ஔவையார், காரைக்கால் அம்மையார் போன்றோரையும் கற்புகரசியாக வாழ்ந்த நளாயினி, சந்திரமதி போன்ற வர்களை நாம் இன்று தெய்வமாக வழிபடும் கண்ணகி, வீர மங்கையராக வாழ்ந்த வேலுநாச்சியார் மற்றும் ஜான்சிராணி போன்ற சரித்திர சாதனை படைத்த பெண்களை இன்று வரை பெருமையோடு போற்றி புகழ்கிறோம்.

இதற்கும் மேலாக பெண்களை புண்ணிய நதிகளோடு ஒப்பிட்டு தெய்வமாக வழிப்பட்ட இந்த சமுதாயத்தில் காலப் போக்கில் பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டு, பெண் சிசு கொலை, உடன்கட்டை ஏறுதல், குழந்தை திருமணம் என பல கொடுமைகள் இழைக்கப்பட்டன. பெண்களை அடிமைகளாக்கி இழிவுபடுத் துவதோடு அவர்களை தங்களுக்கு சாதகமாகவும் பயன்படுத்துவதும்

பெண் என்பதால் அவளை சமுதாயத்தில் இருந்து ஒதுக்கி வைத்தும் அடுப்படியே அவளுக்கு சொர்க்கம் என்று பெண்களை வீட்டிற்குள்ளேயே முடக்கி வைத்தனர்.

பெண் அடிமைத்தனத்தை போக்கி அவர்கள் இந்த உலகில் சக மனிதர்களாக வாழ வேண்டும். தங்களுக்கு விதிக்கப்பட்ட தடைகளை கடந்து புதுமைப் பெண்களாய், புரட்சி பெண்களாய் முன்னேற்றம் காண வேண்டும். பெண் விடுதலை பற்றிய விழிப்புணர்வை அவர்களுக்கு ஏற்பட வேண்டும் என பாரதி, பெரியார் போன்றவர்கள் போராடினார்கள்.

இதன் காரணமாக பெண்கள் தங்களின் பலம் என்னவென்று உணரத் தொடங்கினர். தங்களின் உரிமைக்காக தாங்களே போராடத் தொடங்கினர். மனவலிமையோடு போராடிய அவர்கள் அதில் வெற்றியும் பெற்றனர்.

பெண்கள் பல்வேறு தடைகளை கடந்து கல்வி அறிவின் மூலம் வீட்டிலும், நாட்டிலும் தங்களின் நிலையை இந்த உலகிற்கு உயர்த்தி காட்டினர்.

இன்று பெண்கள் மருத்துவம், கல்வி, விஞ்ஞானம், தொழில், நீதி, காவல் மற்றும் இலக்கியம் போன்ற துறைகளில் முன்னேற்றம் கண்டு ஆணுக்கு நிகராக தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வெற்றி நடை போடுகின்றனர்.

நகர்ப்புற பெண்கள் மட்டுமின்றி கிராமப்புற பெண்களும் சிறுசிறு கைத்தொழில்கள் மூலம் தன் குடும்பத்தின் தரத்தை உயர்த்தி ஒப்பற்ற இல்லத்தரசிகளாக இந்த சமுதாயத்தை முன்னெடுத்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

பெண்கள் அரசுத்துறை, தொழில்துறை மட்டுமல்லாமல் அரசியலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு அதிலும் தலைமைப் பண்பு மிக்கவர்களாக நிரூபித்துக் கொண்டுள்ளனர். இன்று அரசியலில் பெண்களின் பங்கு அளப்பரியதாக உள்ளது.

பெண் என்பவள் அவள் அடையும் துன்பம், அன்பு மற்றும் கோபம் என்று அனைத்து உணர்வுகளையும் அவளுக்குள்ளேயே அடக்கி கொள்பவள்.

பெண் என்பவள் தனக்கு நியாயமாக கிடைக்கக் கூடிய உரிமைகளுக்காக போராடி வெற்றி பெறத் தெரிந்தவள்.

பெண் என்பவள் அடம்பிடிக்கும் குழந்தையை அன்போடு அரவணைத்துக் கொள்பவள்.

பெண் என்பவள் இரவு, பகல் பாராமல் தன் குடும்பத்திற்காக உழைக்கக் கூடியவள்.

பெண் மென்மையானவள் என்றாலும் மன வலிமை மிக்கவள்.

தொட்டிலை ஆட்டிய கைகள் இன்று துப்பாக்கி ஏந்தி போரிடும் வீராங்கனைகளாகவும் உருவாகியுள்ளனர்.

அடுப்பூதும் கைகள் கூட பேனா முனையால் பல சாதனை படைக்கும் என நிரூபித்தவர்கள்.

இந்த நூற்றாண்டில் எதையும் சாதிக்கக் கூடிய வீரப்பெண்களாக திகழ்கின்றனர்.

இத்தனை முன்னேற்றம் கண்ட பெண்கள் தன் நிலையிலிருந்து சற்றே விலகி நிற்பதும் பயப்படுவதும் பாலியல் துன்புறுத்தல் களுக்கு மட்டுமே.

இந்த சமுதாயம் பெண்களை பாலியல் வன்கொடுமை யிலிருந்து முழுமையாக பாதுகாக்குமேயானால் அவர்கள் முன்னேற்ற பாதையில் முனைந்து செயல்பட்டு வீடும், நாடும் உயர தங்களை முழுமையாக அர்ப்பணிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

பெண்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் என்பதை கருத்தில் கொண்டு பெண்மையை போற்றுவோம்.

**அனைவருக்கும் மகளிர் தின நல்வாழ்த்துகள்.**

# மகளிர் தினம் - ஏன் கொண்டாடுகிறோம்?

**மா**ர்ச்-8, மகளிர் தினம் கொண்டாடப்படுவதன் நோக்கத்தை தெரிந்து கொள்ள வரலாற்றை சற்று பின்னோக்கி பார்ப்போம்.

1789-ம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சியின் போது பெண்கள் சுதந்திரம், சமத்துவம், வாக்குரிமை, வேலைக்கு ஏற்ப ஊதியம், 8 மணி நேர வேலை போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி போராடினார்கள். ஆண்களுக்கு இணையாக பெண்களும் தங்கள் உரிமைகளைக் கேட்டுப் போராடியதைக் குறிப்பிடத்தான் பெண்கள் தினம் கொண்டாட காரணமாக அமைந்தது.

1910ம் ஆண்டு டென்மார்க்கில் ‘‘உலக சோஷலிச பெண்கள்’’ மாநாடு நடைபெற்றது. ஜெர்மனியின் கம்யூனிச கட்சித் தலைவர் கிளாரா செர்கினே, இதில் உலக மகளிர் தினம் கொண்டாடப்பட வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார். இதன் தொடர்ச்சியாக, முதல் சர்வதேச மகளிர் தினம் 1911 மார்ச் 19-ல் பல்வேறு நாடுகளில் கொண்டாடப்பட்டது.

1917ல் ஆயிரக்கணக்கான ரஷ்ய வீரர்கள் போரில் இறந்தனர். அந்த சமயத்தில் "Bread & Peace" என்ற தொழிலாளர்கள் பேரணியை மார்ச் 8-ல் பெண்கள் தொடங்கினர். சுமார் 2 லட்சம் பேர் இப்பேரணி யில் கலந்து கொண்டு போராடினர். அப்போராட்டத்தின் தொடர்ச்சியாக நவம்பர் புரட்சிக்குப் பின் ரஷ்யாவில் ஆட்சி மாற்றம் நடந்தது. ஆகவேதான் மார்ச்-8 பெண்கள் தினமாக உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

1945-ல் ஐ.நா. சபையில் பெண்களின் உரிமைக்காக பல்வேறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டது. ஐ.நா. சபையும் பெண்கள் தொடர்பான சர்வ தேச கொள்கைகள், திட்டங்களை மேம்படுத்த முயற்சியெடுத்தது. 1975-ம் ஆண்டை சர்வதேச பெண்கள் ஆண்டாகவும் ஐ.நா. சபை அறிவித்தது. 1977-ல் ஐ.நா. பொதுச் சபையில்உலக மகளிர் தினத்தை ஐக்கிய நாடுகள் சபை பெண்கள் தினமாக மார்ச்-8 கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

பெண்கள் தங்கள் உரிமையினால் எச்செயலையும் துணிச்சலுடன் செய்ய முடியும் என்ற தன்னம்பிக்கையை உணர்த்தும்விதமாகவும், அவர்களின் முயற்சிக்கு ஊக்கம் அளித்து பக்கபலமாக ஆண்கள் இருந்து அவர்களின் வளர்ச்சிக்கு வழிவகுக்கவும் இந்நாள் உணர்த்துகிறது.

*‘‘ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்,*
*அறிவி லோங்கி, இவ் வையகம் தழைக்குமாம்...’’*

என்ற பாரதியின் கனவை நனவாக்கி, நம் எண்ணங்களால், செயல்களால் இவ்வுலகை உயர்த்தும் பெண்களுக்கு,

‘‘இனிய மகளிர் தின நல்வாழ்த்துக்கள்

அன்புடன்,
**வீ. பாரதி**

# உலக மகளிர் தினம்

பெண்ணடிமையை அகற்றிட
பெண் வன்முறையை ஒழித்திட
பெண் உரிமையை நிலை நாட்டிட
போராடி பெற்ற தினமிது!

பிரான்சின் 2வது குடியரசில்
மன்னல் லூயிஸ் பிளங்க் அரசவையில்
மார்ச் எட்டாம் நாள், அரங்கேறிய தினமிது!
மங்கையரும் ஓட்டளிக்க
ஒப்புதல் தந்த தினமிது - ஆம்

மார்ச் 8-ஆம் நாள் மலர்ந்து வந்த தினமிது!
மங்கையர்க்கு பெருமை சேர்க்கும் மகத்தான தினமிது!

குடும்ப தலைவியாய்
குலம் காக்கும் குலமகளாய்
பாசமுள்ள அன்னையாய் - முதல்
பாடம் புகட்டும் ஆசிரியையாய்
பாரினில் வலம் வரும் பண்பான தினமிது!

அன்பெனும் அமுதம் நிறைந்த
அட்சயப் பாத்திரம்
பொறுமை எனும் நகையணிந்து பூமித்தாயாய்
பிறவிஎடுத்தவள் பெண்-என்று
பறை சாற்றும் தினமிது!

அடுப்பூதும் பெண்களுக்கு
படிப்பெதற்கு? என்ற நிலைமாறி
பாரதி கண்ட புதுமைப் பெண்களாய்

முதல் பெண் பிரதமர் இந்திராகாந்தி
ஜனாதிபதி பிரதீபாபட்டேல்
சபாநாயகர் ஷாநோதேவி
முதலமைச்சர் சச்சிதாகிருபாளினி

விளையாட்டு வீரர் மித்தலிராஜ் - என
பெண்மையின் பெருமைதனை
நினைவு கூறும் தினமிது!

உலக வரலாற்றில் தினம் உலா வந்து
விளையாட்டோடு விண்வெளிப்பயணம் மேற்கொண்டு
அறிவியலோடு ஆன்மீகம், அரசியலோடு ஆளுமை
கல்வித் துறையோடு காவல் துறை - என
தரணியெங்கும் பெண்ணினம் - தடம் பதிக்க வந்த தினமிது!

தாயாய், தமக்கையாய், இணையாய், நட்பாய்
நலம் விரும்பும் வழிகாட்டியாய்
உணர்ச்சிகளின் கலவையாய், உணர்வுகளின் புரிதலாய்
புரிந்து கொள்ளும் பொக்கிஷமே!

நதியும் பெண்ணாய் - செந்
தமிழ் மொழியும் தாயாய்
நிலவும், நீலக் கடலும் குமரியாய்
முப்பெரும் தேவியாய்
புன்னகை ஓவியமாய் - உலாவரும்
பெண்ணினத்தைப் போற்றுவோம்!

பெண்ணினம் தழைக்கட்டும்!
பெருமை பல சேர்க்கட்டும்!

மங்கையர் அனைவருக்கும்
மகளிர் தின வாழ்த்துக்கள் பல.

திருமதி. **நளினிஆனந்த்,**
தலைமை வரைவாளர்
மேற்பார்வைபொறியாளர் அலுவலகம்,
(சீரியல் பிரிவு) மாநகர் கோவை.

# மகளிர்

உலக மகளிர் தினம் கொண்டாடும் நாம் அவர்களின் ஒப்பற்ற தியாகங்களை ஓரளவேனும் உணரத் தயாராவோம். மண்ணில் பிறந்திட்ட மகத்துவமாய், விண்ணில் வீற்றிருக்கும் விடிவெள்ளி யாய், வித்தகர் போற்றும் பேரறிவாய், மானுடப் பிறப்பின் முகவரியாய், கண்ணில் கலந்திட்ட ஓவியமாய், கவிஞனின் கற்பனையில் காவியமாய் பிறந்திட்ட பெண்ணினமே என்ன வென்பேன் உன் இயல்புகளை.

காவியங்கள் உன்னை காயப்படுத்தினாலும், ஓவியங்கள் உன்னை ஊடுருவினாலும் ஒப்பாரி மட்டுமே உன் மொழியானது ஒரு காலத்தில், உன்னால் விளைந்தவர் உனக்கெதிரியாய் சதி செய்த போதும் பொறுமை காத்த பூ மகளே. நீ ஓங்காரமாய் ஒலித்தால் ஒருவனும் இல்லை ஒடுக்குவதற்கு, உன்னை பேதை என்றும் போதையென்றும் மட்டுமே எண்ணி தன் பாதையை தவறாக மாற்றிக் கொண்டது இந்த ஆண் சமூகம்.

உன்னை உனக்காக வாழவிடாமல், கற்பென்றும், கண்ணிய மென்றும், கண்ணென்றும், பொண்ணென்றும் போலியாய் பேசி பெண் என்றால் இப்படி மட்டும் இரு என்று பொதுவாய் சொல்லி வைத்த ஆண்களின் முன் பொறுமையை மட்டுமே கடைபிடித்து உன் உணர்வுகளை ஒடுக்கி ஓரமாய் இருந்தாயோ.

வானம் வசப்படும் என்பது வெறும் வாய் வார்த்தையல்ல. உடைக் கப்பட்ட விலங்கை ஏன் உனக்கான வேலியாய் எண்ணுகிறாய். பாவிகள் உன்னை பாவம் என்று சொல்ல நீ பரணியில் பிறக்கவில்லை.

தடைகளைத் தகர்த்தெறிந்து தரணியில் நீ உயர்ந்த போது தானும் ஏற்க வேண்டும் என்ற நிலை வந்தது இந்த தற்குறி மனிதருக்கு.

பெண்ணினமே நீ பேதையல்ல என்பதை நொடிக்கொருதரம் நிரூபித்துக் கொண்டு தான் இருக்கின்றாய். ஆண்டவன் படைப் பிலும் ஆதியானவள் நீதான். மெல்லினமே நீ மெழுகுவர்த்தி யாயானதால் மேன்மையடைந்தவர் பலவர் உன்னை உருக்கி உலகுக்கு ஒளி தருபவள் நீ. வாழ்வியலை கற்றுக் கொடுத்தாய் நீ வாழாமல் விட்டுக் கொடுத்தாய். பூமிதனில் வேறு பிறப்புண்டோ நின் போற்றுதலுக்குரிய பிறப்பின்றி.

மகளிர் தினம் கொண்டாடும் போது மட்டுமே உன் மகத்துவத்தை புகழாமல் மானிடம் உள்ளவரை மரியாதை செய்ய கடமைப்பட்டுள்ளோம். இம்மண்ணை உண்டாக்கிய வித்தகரும் முன்னம் உன்னை உண்டாக்கி முதலென்றான் சூசகமாய் யானும் அறிந்திட்டேன் உண்மையை எனக்கொரு மகள் பிறக்கையிலே.

ஆண்டாண்டாய் பெண்ணை அடிமைப்படுத்தியே பழக்கப் பட்ட இந்த சமூகம் அரை நொடியில் திருந்தாவிட்டாலும் அவள் ஆற்றலை அடக்கி வைக்கவோ அவளின் மீது இனி ஆதிக்கம் செலுத்தவோ முடியாது என்பதை உணர்ந்துள்ளது.

இயல்பாய் இருக்கும் பெண்ணினத்தை ஏளனம் செய்யாமல் அவர்கள் ஏற்றத்திற்கான ஏணிகளாவோம். ''பெண்மையை போற்றுவோம்''.

நன்றி

**தே. சாமுவேல் ஜான்சன்,** பி.காம்,எம்பிஏ
பொருளாளர்/ பல்லடம்

# பெண்களின் முன்னேற்றம்

**முன்னுரை :**

எத்தனை கோடி வருடங்கள் தவமிருந்தாய்? இத்தனை அழகாய் தோன்றிடும் பூமியில் பெண்ணாய் பிறந்திட, உயிர்மெய் மானுடம் பிறக்க மெய்க்கந்த உயிர்க் கொடுத்த உயிரெழுத்து பெண்கள், இத்தகைய சிறப்பு மிக்க பெண்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**பொருளுரை :**

கண்ணின் கரு விழியாக காத்து ஊர்வியக்க பிள்ளையை வளர்க்கும் நம் அன்னையாய், சோர்வோ, சோகமோ, சுருண்டு அமர்ந்த உன்னை அப்பா எனும் வார்த்தையில் நிமிர்ந்தெழ செய்யும் உம் மகளாய் பிறந்தவள் பெண்கள் தான் குழந்தை என்னும் உயிர்க் கொடுக்கும் கருவியாக மட்டும் பெண்ணைப் பார்த்த காலத்தில் மக்களுக்கு உயிர் கொடுக்க போராடி படித்த முதல் பெண் மருத்துவர்

முத்துலெட்சுமி அம்மையார். உலகிலேயே அதிக குழந்தைகளுக்கு அன்னையாகவும் அதிக அன்பு சொட்டும் இடத்தின் முகவரியாகவும் இருந்த புனிதர் அன்னை தெரசா வீட்டுக்கு வெளியே செல்ல தடைவிதித்த காலத்திலேயே விண்வெளிக்கு சென்ற இந்திய விண்வெளி பறவை கல்பனா சாவ்லா பல துறைகளில் அசத்தினாலும் மைதானத்திலும் மிரளய வைத்த சானியா மிர்சா, சிந்து போன்றோர்கள். நாட்டைக் காக்க முற்பட்ட முதல் பெண் காவலர் கிரண்பேடி அம்மையார் அவர்கள் பெண்தான் சமயம் வந்தால் வேல் வீசும் காளியென நிரூபித்த ஜான்சிராணி, வேலுநாச்சியார் போன்றோர் பெண்தான்.

குடும்பமோ... நாடோ... பெண்கள் நிர்வாகம் சிறந்த நிர்வாகம் என்று விளங்கச் செய்த அம்மையார் இந்திரா காந்தி போன்ற பெண் தலைவர்கள் மத்தியில் தன் இழப்பால் தமிழக அரசியலின் இயல்பே இழக்கச் செய்த முன்னாள் முதல்வர் அம்மையார் ஜெயலலிதா இப்படிப்பட்ட பெண்களை பேணிக்காப்பதை விட இழிவாக மேனி ரசிக்கும் தவறு ஒரு சிலருடையது. பெண் விடுதலைகக்கு போராடியதே இங்குள்ள ஆண்களை நம்பிதான்.

**சதி தாண்டி மதி கொண்டு விதி வென்ற பெண்ணே**
**நீ விதி வர அஞ்சலாமா....**
**பிள்ளையின் பிறப்பிற்காக மரணத்தின் விழும்பிற்கு சென்று வரும் நீ**
**ஒரு படி மேல்...**
**நிரந்தர வீடின்றி பிறந்த வீடு**
**புகுந்த வீடே என்று அழைப்பவள் பெண்தான்...**

**முடிவுரை**

கொம்பு கொண்ட காளையின் ஜல்லிக்கட்டுக்காக கொம்பில்லா பசு மனம் கொண்ட வெகுண்ட எழுந்த எத்தனை வீரத் தமிழச்சி களும், கர்ஜிக்கும் சிங்கத்தை வாய் மூட செய்ய தெரிந்தவர்கள் பெண்கள்தான். இங்கு குறிப்பிட்டவர்கள் பலவில் சிலவே அனைவரையும் குறிப்பிட்டால் நீடிக்கும் கவியின் அளவே இத்தகைய சிறப்புமிக்க பெண்மையை எந்நாளும் போற்றிடுவோம்.

**ஆர். கீர்த்தனா,** நிர்வாக உதவியாளர்
செயற்பொறியாளர் /இ&பே/பவானி
கோபி மின் பகிர்மான வட்டம்/கோபி



# Er. R. சித்ரா

**கணபதி, கோயம்புத்தூர் மாவட்டம்**

**த**மிழ்நாடு மின்சார வாரியத்தில் செயற்பொறியாளராக பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்ற பொறிஞர்.

பொறியியல் முதுகலை பட்டமும் முனைவர் பட்டமும் பெற்றதுடன் வணிகவியலும், கணினித் துறை முதுகலைப்பட்டம் பெற்றவர்.

சுமார் 16 வருடங்கள் மின்னியல் சார்ந்த பணிகளும் 10 வருடங்கள் கணினி சார்ந்த பகுதி பணிகளும் திறம்பட பணியாற்றினார்.

காடம்பாறை மின்உற்பத்தி நிலையம் மற்றும் துணை மின்நிலையங்களும் மற்றும் உடுமலை காற்றாலை பண்ணையிலும் பணியாற்றிய அனுபவத்துடன் மின்சாரத்தை விநியோகம் செய்யும் பிரிவு அலுவலகப் பணியில் மக்களுக்கு சேவை செய்வதிலும் பத்தாண்டுகள் நிறைவாக பணிபுரிந்துள்ளார்.

தகவல் தொழில்நுட்பத்தை விரிவாக்கம் செய்வதற்கான மத்திய அரசின் நிதி சுமார் 400 கோடி அளவில் பெறுவதற்காக பணியாற்றுபவர்களில் ஒருவராய் இருந்துள்ளதும் மின்சார வாரியத்தில் சிறப்பான மின்கட்டமைப்பு உருவாகுவதிலும், மின்சார சேமிப்பு, மின் சிக்கனம் போன்றவைகளுக்கான மின்னியல் சார்ந்த தொழில்நுட்ப பிரசங்கக் கூட்டங்களில் உரை நிகழ்த்தியுள்ளதும் பெருமைக்குரிய ஒன்றாகும்.

100 கல்லூரிகளுக்கும் மேல் உயர்படிப்பு பொறியியல் பயிலும் மாணவர்களுக்கு திட்டங்கள் குறித்த பணிக்கு வழிகாட்டும் பணியில் ஈடுபட்டு உதவியுள்ளார்.

பொறியியல் கல்லூரிகளில் விருந்தினர் விரிவுரையாளராகவும் மற்றும் பொறியியல் சார்ந்த மாநாடுகளில் தலைமையுரையும் நிகழ்த்தும் பொறுமை கொண்டவராக திகழ்கிறார்.

பொறிஞர் பணியோடு விளையாட்டின்மீது பேரார்வம் கொண்டவர். சிறந்த விளையாட்டு வீராங்கனையாகவும் விளங்குவதுடன் பொறியியல் சார்ந்த நூல்கள் பிற பொறிஞர்களுடன் சேர்ந்து நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார்.

மின்வாரியப் பணியிலிருந்து விலகி தன்னார்வலராக, தொழில் முனைவோராக, எழுத்தாளராக, பேச்சாளராக, பொறியியல் துறையில் சிறந்த வல்லுநராக அனைவரிடத்திலும் அன்புடன் பழகும் நல்ல மனித நேயராக விளங்கும் திருமதி Dr. R. சித்ரா அவர்களை பாராட்டி **TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மகளிரணி சார்பாக நடைபெறும் மகளிர் தின விழாவில் ''வாழ்நாள் சாதனையாளர் விருது'' வழங்கி பெருமைப்படுத்துகிறோம்.**

□



## மருத்துவர் கலா மகேசுவரன்

**மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்.**

ஈரோடு மாவட்டம், வடமுகம் வெள்ளோடு என்ற ஊரில் விவசாயக் குடும்பத்தில் மூன்றாவது பெண் குழந்தையாக பிறந்தவர்.

பெரும் படிப்பு படிக்காத குடும்பத்தில் மூத்த அக்காவும், திருமதி கலா மகேசுவரன் அவர்களும் மருத்துவம் பயின்றவர்கள்.

ஆரம்பக் கல்வியை நவரசம் பள்ளியிலும், உயர்நிலைக் கல்வியை ஈரோடு கலைமகள் பள்ளியிலும் பயின்று நல்ல மதிப்பெண் பெற்றதால் கோவை அரசு மருத்துவ கல்லூரியில் 1991ம் வருடம் பயில்வதற்கான வாய்ப்பு கிட்டி 1998ம் ஆண்டு தஞ்சை மருத்துவக் கல்லூரி MD மயக்கியல் துறையில் பயின்றுள்ளார்.

கணவர் திரு. மகேசுவரன் குழந்தைகள் நல மருத்துவர் - இரு பெண் குழந்தைகள் மூத்தவரும் இளையவரும் முறையே 12ம் வகுப்பும், 5ம் வகுப்பும் பயின்று வருகின்றனர்.

தனது அத்தை, மாமா மற்றும் டாக்டர் M.K. பஞ்சாட்சரம் ஆகியோர் இணைந்து நடத்தி வந்த சுப மருத்துவமனையில் மயக்கியல் மருத்துவத்துடன் மகளிர் மருத்துவமும் செய்து வருகிறார்.

1992ம் வரும் முதல் வலியில்லா பிரசவ முறையை (ஆரம்பித்து சுமார் 2000க்கு) மேற்பட்ட வலியில்லா பிரசவ சிகிச்சையினை மேற்கொண்டு வருகிறார்.

தமிழகத்தில் வலியில்லா பிரசவம் பார்த்த மருத்துவர்கள் சிலரில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுப மருத்துவமனையில் ஏழை எளிய மக்களாக இருக்கக் கூடிய நோயாளிகளே அதிகம் வருவது வழக்கம். மருத்துவத் தொண்டு மக்களுக்கானது என்ற அடிப்படையில் தனது அத்தையை பின்பற்றி மருத்துவப் பணியை மேற்கொள்கிறார்.

குறிப்பாக அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற முடியாத பெண்களுக்கு கூட குறைந்த கட்டணத்தில் மருத்துவம் செய்து வருகிறார்கள்.

இலவச மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள் மேட்டுப்பாளையத்தில் Young MTP எனும் அமைப்போடு இணைந்து நடத்தி வருவதுடன், இயற்கையை நேசிக்கும் மருத்துவராக மருத்துவ தொழில் புனிதமாக கருதும் மருத்துவராக ஏழை எளிய மக்களின் துயர் துடைக்க முன் வரும் மருத்துவராக விளங்கி மக்கள் பணியில் முன் நிற்கும் மருத்துவர் கலா மகேசுவரன் அவர்கட்கு **TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மகளிரணி சார்பாக 2020 மகளிர் தின விழாவில் ''மருத்துவ மாமணி விருது'' வழங்கி பெருமைப்படுத்துகிறோம்.**

□



## த. பரிமளாதேவி

**பட்டிவீரன்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.**

திண்டுக்கல் பட்டிவீரன்பட்டியில் வசித்து வரும் திரு. தனராஜ் ஆசிரியர் அவர்களின் இணையர். பட்டிவீரன்பட்டி நாடார்கள் சுந்தர விசாலாட்சி பள்ளியில் இருவரும் ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள்.

பேசுவதிலும், எழுதுவதிலும் இளம்பிராயம் முதல் ஆர்வம் கொண்டிருந்தவர். ஆசிரியர்களுக்கிடையேயான சிகரம் தொட்ட ஆசிரியர்கள் போட்டியில் வெற்றி வாகை சூடியுள்ளார்.

பள்ளியில் சிரோன் மணி ராஜ் நினைவு விருதும், தினமலர் பத்திரிக்கை நடத்திய ''இலட்சிய ஆசிரியர்'' விருதும் பெற்றுள்ளார்.

கல்யாண மாலை ஆரம்ப கால நிகழ்ச்சியில் தென்கச்சி சுவாமிநாதன் தலைமையிலும், பட்டிமன்றத்திலும், சன்டிவி, KTV போன்ற தொலைக்காட்சிகளில் புதுமைப் பெண்கள் நிகழ்ச்சியில் நடிகை ரேவதி தலைமையில் கருத்தரங்கத்தில் பேசியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

பள்ளியிலும், பொது நிகழ்வுகளிலும் நூற்றுக்கு மேற்பட்ட பட்டிமன்றங்களில் பேசியுள்ளார். தமிழகம் முழுவதும் பல இடங்களில் 150க்கு மேற்பட்ட கவியரங்கங்களில் கவிதை வாசித்து மிகப் பெரும் கவிஞராக விளங்குவதுடன் கவியரங்குகளில் தலைமை வகித்தும் வழி நடத்தி வருகிறார்.

*பணியாற்றிய காலத்தில் தனது பணியிலே சிறப்பு கவனம் செலுத்தி பள்ளிப் பணியையே கண்ணாக கொண்டு விளங்கியதால் தனது எழுத்தார்வத்திற்கு வடிகால் இல்லாதிருந்த நிலையை போக்கும் வகையில் ஓய்வு பெற்ற பின்னர் மெல்ல விரியும் சிறகுகள் என்ற கவிதை நூலை வெளியிட்டார். இக்கவிதை நூல் தமிழகம் முழுதும் கவிஞர்கள் கரங்களில் கவியரங்கங்கள் வாயிலாக சென்று சேர்ந்தன.*

*புதுக்கவிதை மேல் பேரார்வம் கொண்டவர். புதுக் கவிதையோடு குறுங்கவிதைகள், நெடுங்கவிதைகள், ஹைக்கூ கவிதைகள் மற்றும் தன்முனைக் கவிதைகள் என தொடர்ந்து எழுதி தமிழ்ப் பணியாற்றி வருகிறார்.*

*2016க்கும் 2020 பிப்ரவரிக்கும் இடையே இணையத்தில் நடந்த கவிதை போட்டிகளில் கலந்து 1000 சான்றிதழ்களும் பல்வேறு விருதுகளும் பெற்று கவிஞராக, எழுத்தாளராக, பேச்சாளராக வலம் வந்து ஆசிரியப் பணிக்குப் பின்னர் தமிழ்த் தொண்டாற்றுவதில் முன்னணியில் நிற்கும் திருமதி. பரிமளாதேவி அவர்களை பாராட்டி* **TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மகளிரணி சார்பில் நடைபெற்ற 2020 மகளிர் தின விழாவில் ''தமிழ்ப் பணிச் செம்மல் விருது'' விருது வழங்கி பெருமைப்படுத்துகிறோம்.**

□



## ப. வீரலட்சுமி, B.E.,
**திருவண்ணாமலை மின் வட்டம்**

திருவண்ணாமலை மின்வட்டம் மத்திய அலுவலகத்தில் உதவி செயற்பொறியாளராக பணி செய்து வருகிறார். மின்சார வாரிய பொறியாளரின் மகளாக பிறந்து மின்சார வாரியத்திலே பொறியாளராக பணி செய்து வருகிறார்.

சிறுவயதின் முதலே விளையாட்டின் மீது தனியாத ஆர்வம் கொண்டு பல்வேறு போட்டிகள் பரிசுகள் பெற்றிருந்தாலும், கல்லூரிப் படிப்பின் போது தான். போட்டிகளில் பங்கெடுக்கும் வாய்ப்புக்கு திருப்பு முனையாக அமைந்திருக்காது.

சதுரங்கம் மற்றும் சுண்டாட்டம் விளையாட்டுகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி கொண்ட பொறிஞர் வேலூரில் தந்தை பெரியார் கல்லூரியில் படிக்கும்போது மாநில அளவிலான சுண் டாட்டம் போட்டியில் போட்டியிட்டு வெற்றியை நழுவ விட்டுள்ளார்.

அடுத்த வருடம் அதே கல்லூரியில் சுண்டாட்டம் விளை யாட்டு மாநில அளவிலான போட்டியில் முதலிடம் வென்றதே விளையாட்டில் திருப்பு முனையாகும்.

பொறியாளர் படிப்பு படிக்கும் சமயம் விழுப்புரம் சுண்டாட்டப் போட்டியில் வென்று அன்றைய தமிழக அமைச்சர் அவர்களிடம் பரிசு பெற்றுள்ளார்.

*2008 முதல் 2018 வரை ஹைதராபாத், புனே, விசாகப்பட்டினம், ஈரோடு மற்றும் திருப்பதி போன்ற இடங்களில் நடைபெற்ற சுண்டாட்டப் போட்டிகளில் வென்று சாதனை படைத்துள்ளார்.*

*2010ல் புனேயில் நடைபெற்ற அகில இந்திய மகளிர் விளையாட்டு போட்டியில் முதலிடம் பெற்றதால் தமிழ்நாடு மின்சார வாரியம் பெருமையடைந்தது.*

*மின்சார வாரியத்தின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் அகில இந்திய அளவிலான போட்டிகளில் தொடர்ந்து வெற்றி பெற்று பெருமை சேர்த்துள்ளார்.*

*மின்சார வாரியப் பணி மிகவும் கடுமையான பணியென்ற போதிலும் ஆணும், பெண்ணும் சரிநிகர் சமமாக பணியாற்றி வருவதை போலவே தனது மின்சார வாரியப் பணியையும் மேற்கொண்டு விளையாட்டிலும் தொடர்ந்து ஆர்வம் காட்டி வெற்றிகளைக் குறித்து வருவதுடன் மின்சார வாரியத்தில் உள்ள விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு முன்னுதாரணமாகத் திகழ்வதுடன், இத்தனை பெருமைக்கும் வளர்ச்சிக்கும் அப்பா, அம்மா, உடன் பிறந்த சகோதர சகோதரிகளும், தனது வளர்ச்சிக்கு படிக்கல்லாக திகழும் கணவருமென பெருமையோடு கூறி மகிழும்* **திருமதி வீரலட்சுமி உதவி செயற்பொறியாளர் அவர்களை 2020 மார்ச் 8ல் TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் சார்பாக நடைபெறும் மகளிர் தின விழாவில் பாராட்டி ''சுண்டாட்ட வீராங்கனை விருது'' அளித்து பெருமைப் படுகிறோம்.**

□



## ந. பரஞ்ஜோதி

**செங்கல்பட்டு மாவட்டம்**

இவர் காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியத்தில் உள்ள குரும்பிறை கிரமத்தில் பிறந்தவர். இவர் இளமை பருவம் முதல் சமூக அக்கறையும், தமிழ் ஆர்வமும் கொண்டவர். பள்ளிப் பருவம் முதல் மேடைகள் பல கண்டு இந்திய ஒன்றியத்தின் 40-வது சுதந்திர தினத்தில் 9ஆம் வகுப்பு மாணவியாக இருந்த போது ஆல் இந்தியா ரோதயோ நிறுவனத்தால் சிறந்த பேச்சாளராக பாராட்டும் விருது பெற்றவர்.

பள்ளியில் விளையாட்டுதுறை, மேடை, கலை இலக்கியம், பேச்சு-மாறு வேடம் எனவும், சமூக பணியிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி கொண்டவர்.

ஒடுக்கப்பட்ட மற்றும் நசுக்கப்பட்ட சமுதாயத்திற்கு எதிராக நடந்த அநீதிகளையும், கொடுமைகளையும் குறிப்பாக ''இரட்டை குவளை'' முறை, கொத்தடிமை குடும்பம் மற்றும் குழந்தை தொழிலாளர்களை முறையை எதிர்த்து போராடியவர்.

சமூக பணியில் ஆர்வம் கொண்ட இவர், பொருளாதாரத்தில் பின் தங்கி இருந்தாலும், சமூகத்தின்பாற் கொண்ட அக்கறையால், பெண்கள் முன்னேற்றம், குழந்தைகள் முன்னேற்றம் மற்றும் மாற்று திறனாளிகள் மறுவாழ்வு என தொடர்ந்து தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

இன்று சமூகத்தில் குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்து Child Line -1098 இணைந்து கைவிடப்பட்ட

குழந்தைகளை கண்டெடுத்து குழந்தைகள் நலக்குழுமத்தில் முன்னிலைபடுத்துதல், ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் பெண் களுக்கு பாதுகாப்பு பராமரிப்புப் பெற்று தருதல், பாலியல் ரீதியான துன்பத்திற்கு ஆளாக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஆலோசனை, பாதுகாப்பு-பராமரிப்பு, மருத்துவம், தங்கும் வசதி என அரசு சார்ந்த உதவிகளையும் பெற்று தருதல், குழந்தை திருமணங்களை தடுத்து திருத்தி குழந்தைகளுக்கு மறுவாழ்வும், குற்றவாளிகளுக்கு சிறை தண்டனையும் பெற்று தந்துள்ளார்.

சமூகத்தில் இவரின் பெரும் பங்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், அனைத்து துறை சார்ந்து விழிப்புணர்வுகளை பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடம் கலந்துரையாடல், பொது இடங்கள், மருத்துவமனைகள், அங்கன்வாடி, கர்ப்பிணிபெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் அரசு நடுநிலை பள்ளி முதல் மேல்நிலை பள்ளி இருபால் ஆசிரியர்களுக்கும், அங்கன்வாடி ஊழியர்களுக்கும் Posco Act 2012ப் பற்றி விழிப்புணர்வு வகுப்புகளை தொடர்ந்து அளித்து கொண்டு வருகிறார்.

தனது குரல் வளத்தால் பல தமிழ் வழி பாடல் கதைகளோடு கருத்துக்களை வழங்கி அனைத்து ஆசிரியர்களின் பாராட்டை பெற்றவர். அதுமட்டும் இன்றி பள்ளியில் SML உறுப்பினர்கள், மகளிர் குழுக்கள், PTA உறுப்பினர்கள் என அனைவருக்கும் கருத்துரையாற்றி மாவட்டத்தில் வலம் வருகிறார்.

மாற்றுத் திறனாளிகளுக்காக கடந்த 15 வருடங்களாக மறு வாழ்வு பணி செய்து வருகிறார். SIRD மூலம் நடத்தப்பட்ட காலநிலை மாற்றத்திற்கான விழிப்புணர்வு பயிற்சி முடித்து மாவட்ட பயிற்றுனராக கிராம ஊராட்சிகளில் செயலாற்றி வருகிறார். பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்ட மகளிர் சுயஉதவிக்குழுக்களை மாவட்டம் முழுவதும் அமைத்து ஊக்குநர் மற்றும் உறுப்பினர் களுக்கு பயிற்சியினை வழங்கி வருகிறார். 2010ம் ஆண்டு முதல் மாவட்ட மக்கள் நீதிமன்றத்தின் வழக்காடு ஆலோசனை உறுப்பினராக கலந்து கொண்டு வருகிறார்.

இவரது சமூகப் பணியினைப் பாராட்டி **TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மகளிரணி சார்பாக நடைபெறும் மகளிர் தின விழாவில் "வாழ்நாள் சாதனையாளர் விருது" வழங்கி பெருமைப்படுத்துகிறோம்.**



# P. சீதா

**சேலம் மாவட்டம்**

சேலம் அரிசிப்பாளையத்தைச் சேர்ந்த திரு. பொன்னுசாமி, திருமதி. பெரியம்மா ஆகியோரின் புதல்வியாவார். சமுதாய சேவை செய்வதில் மிகவும் புரட்சிகரமான பெண்ணாக திகழ்கிறார்.

திருமணமானபின் குடும்பத்தைப் பிரிந்து சென்ற தந்தை, தந்தையால் உயிரிழந்த தாய் என குடும்ப பின்னணி உடைய சீதா அவர்கள் கல்லறைத் தோட்டத்து கன்னியாஸ்திரி என அப்பகுதி மக்களால் அழைக்கப்படுகிறார்.

சொந்த வீடு வசதிகள் இருந்தும் சேலம் பெரமனூரில் உள்ள சுடுகாட்டில் எந்நேரமும் உள்ளார். தன் தாயார் இறந்த துயரமான சம்பவத்தையும், மருத்துவம் செய்தும் பலனளிக்காததையும், தந்தை வைத்த தீயால் வெந்து நாசமான தாயின் உடலும், உயிரும், தாயாருக்கு நல்லடக்கம் செய்ய முடியாத அவல நிலையும் எண்ணி 11 வயதில் தாயை இழந்தவர், தன்னைப்போல் யாரும் தாயை அடக்கம் செய்ய முடியாத நிலக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காக இந்த சேவையை செய்கிறார்.

திருமணம் செய்து கொள்ளாமல் கன்னியாஸ்திரியாக வாழ்ந்து தேவாலயங்களில் கடவுளுக்கு சேவை செய்வது போல பிணங்களை கடவுள்களாக கருதி அடக்கம் செய்து வருகிறார்.

12 வயதில் இப்பணியை செய்திட துணிந்தவர் இன்று வரை சுமார் 5000க்கு மேற்பட்ட அனாதை சடலங்களை அடக்கம்

செய்துள்ளார். இதுபோல உறவினர்களால் கொண்டு வரப்படும் 3000க்கு மேற்பட்ட சடலங்களையும் அடக்கம் செய்துள்ளார்.

சாதாரணமாக பெண்கள் படிதாண்டி வரமாட்டார்கள். இந்த காலத்தில் பெண்கள் வேலைக்கு செல்வது என்பது வேறு. தாயோ, தந்தையோ, சகோதர, சகோதர உறவினர்களோஏன் கணவரே இறந்தாலும் கூட பெண்கள் சுடுகாடு வரை வர அனுமதிப்பதில்லை, வருவதுமில்லை.

வீடு வரை உறவு, வீதி வரை மனைவி, காடு வரை பிள்ளை, கடைசி வரை யாரோ என்ற திரைப்பட பாடல் வரிகள் போல வீதியைத் தாண்டி வராத பெண்கள் வாழும் உலகில் தன்னந்தனியாக ஆணுக்கு இணையாக ஒரு ஆண் செய்யக் கூடியப் பணியை எவ்வித அச்சமுமின்றி வேள்வியைப் போல் செய்து வருவதை பாராட்டி **TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மகளிரணி சார்பில் நடைபெறும் 2020 மகளிர் தின விழாவில் ''வாழ்நாள் சாதனையாளர் விருது'' வழங்கி பாராட்டி மகிழ்கிறோம்.**

□



## ம. ஜெயமேரி

**விருதுநகர்**

**சி**வகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஒன்றியம் உலகினிப் பட்டியில் ஆசிரியையாக பணி செய்து வருகிறார்.

ஆசிரியப் பணி பிழைப்புக்கானது அல்ல, இறைவனின் அழைப்பு என எண்ணி ஆசிரியக் கனவுகளை அம்மா ஊட்டி வளர்த்த காரணத்தினால் தமிழக அரசின் கனவு ஆசிரியர் விருது பெற்ற பெருந்தகையாக உயர்ந்திருக்கிறார்.

சிறந்த பேச்சாளராக விளங்குவதால் பட்டிமன்றத்தில் பேசுவதிலும், சிறந்த எழுத்தாளராக கருத்துகளை விதைப்பதினால் நாளிதழ்களில் எழுதுவதாலும் கிடைக்கும் தொகையினை உண்டியல் சேர்த்து பிள்ளைக்கு தேவையான கரும்பலகை, வண்ணமடித்தல், எழுது பொருள் வாங்குதல், மின்சார மணி பொருத்துதல் மற்றும் வகுப்பறையை சீர்திருத்தல் என செலவிட்டு வருகிறார்.

தனது பள்ளிக்கு அப்பாலும் பிற அரசுப் பள்ளிகளுக்கு உதவுதலும் கடலூரில் உள்ள இயலாத குழந்தைகளுக்கு உணவு வழங்குதலும், கல்லூரி கட்டணம் இயலாத மாணவிக்கு கட்டணம் செலுத்தல் போன்ற சமூகப் பணியும் புரிந்து வருகிறார்.

வள்ளுவத்தை போற்றும் வகையில் மாணவ, மாணவியர்க்கு திருக்குறள் மனனம் செய்யும் பயிற்சியை அளித்து வருகிறார். ஒரு குறள் கூறினால் ஒரு ரூபாய், குறளுக்கு விளக்கம் கூறினால் மேலும்

ஒரு ரூபாய் என மாணவர்களுக்கு படிப்பும் சொல்லி தந்து நிதி உதவியும் அன்பளிப்பு செய்கிறார்.

2ம் வகுப்பு மாணவி ஹரினி 200 குறள்களும், காவியா 250 குறள்களும், கபிலன் 210 குறள்களும் மற்ற மாணவர்கள் 100, 150 எனவும் மனனம் செய்து ஒப்புவித்துள்ளதில் 200 குறள்கள் படித்து முடித்த மாணவர்களுக்கு அஞ்சலக சேமிப்பு கணக்கு துவங்கி வழிகாட்டி வருகிறார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கல்லாங்குறிச்சி ஊராட்சி ஒன்றிய மூன்றாம் வகுப்பு மாணவி 150 குறள்களை 4.46 வினாடிகளில் சொல்லி உலக சாதனை புரிந்திருக்கிறார். 200 குறள்களை இரண்டாம் வகுப்பு மாணவி ஹரினி 5.39 வினாடிகளில் சொல்லி புதிய உலக சாதனை செய்த மாணவியின் ஆசிரியையாக திகழ்கிறார்.

பள்ளிகளில் பசியோடு குழந்தைகள் வருவதால் காலையில் இணை உணவு திட்டத்தை தனது சொந்த செலவிலும் சமூக ஆர்வலர்களின் உதவியாலும் செய்து வரும் ஆசிரியர் தமிழக அரசிடம் காலை இணை உணவு திட்டம் அறிமுகப்படுத்த வேண்டுகோளும் வைத்துள்ள பன்முகத்திறன் கொண்டவரும், தன்னலமற்ற சேவை செய்பவருமாக விளங்கும் திருமதி. ம. ஜெயமேரி அவர்களைப் பாராட்டி **TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மகளிரணி சார்பில் ''வாழ்நாள் சாதனையாளர் விருது'' வழங்கி பெருமையடைகிறோம்.**

□



## R. ரீபா ஜரின் ஜெய கிரேஸ்
### திருவல்லிக்கேணி, சென்னை

**த**மிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள தலைமை மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வருகிறார். இவரது இணையர் திரு. George அவர்களும் மின்சார வாரியத்திலே பணிபுரிபவர்.

செவிலியர்ப் பணியினை மேற்கொண்டிருந்தாலும் சிறந்த கவிஞர், எழுத்தாளர், பேச்சாளரென பன்முகமாக திகழ்கிறார். பள்ளி படிப்பு காலத்தில் மேடைப் பேச்சின் மீதான ஆர்வத்தின் காரணமாய் பல்வேறு மேடைகளில் பேசியுள்ளார். குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்றதும் பெருமை.

சிறுசேமிப்பின் அவசியத்தை உணர்த்தும் வகையில் செயல்பட்டதால் சிறுசேமிப்புக்கான முதல் பரிசும் பெற்று மாணவிகளுக்கு முன்னுதாரணமாக விளங்கியுள்ளார். சிறந்த நாடகக் கலையின்பால் கொண்ட ஈடுபாட்டால் திண்டுக்கல் ஜோசப் மருதரான சிறந்த நடிகையென விருது வழங்கி புகழாரம் சூட்டியுள்ளது.

இலங்கை நாட்டில் உள்ள அப்பல்லோ மருத்துவமனை உள்ள பல அமைப்புகள் இவரது மருத்துவ சேவையை பாராட்டி பல்வேறு விருதுகள் சான்றுகள் வழங்கி கௌரவித்துள்ளன.

தமிழக அரசு பரிந்துரைத்து உலக சுகாதார நிறுவனத்தின் சிறந்த செவிலியர் விருது பெற்றிருக்கிறார்.

எப்பொழுதும் இன்முகத்துடன் நோயாளிகளை கவனித்து பணிவிடை செய்து பெரும் மதிப்பினை மின்சாரத் தொழிலாளர்கள், அலுவலர்கள், பொறிஞர்கள் மத்தியில் பெற்று வைத்திருக்கும் அவர்களை **TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மகளிரணி சார்பில் 2020 மகளிர் தின விழாவில் "சிறந்த செவிலியர் விருது" விருது வழங்கி பாராட்டி கௌரவிக்கிறோம்.**



# சுஜாதா நாச்சியப்பன்

**கோயம்புத்தூர்**

**வி**ருதுநகர் மாவட்டம் பூர்வீகமானாலும் தொழில்சார்ந்து கோவில்பட்டிக்கு குடியேறிய பெற்றோர்களுக்கு மகளான சுஜாதா கோவையில் இளந்தொழிலதிபராக உயர்ந்திருக்கிறார்.

பொறிஞராக விரும்பியவர் Bsc கணினி அறிவியல் பயின்று பொறிஞரை மணந்து சிறந்த குடும்பத் தலைவியானது மட்டுமல்ல, தாயாரை தனக்கு தொழிலில் வழிகாட்டியாக ஏற்று செயல்பட்டு வருகிறார்.

நாட்டில் நெகிழி ஒழிப்பு தீவிரமானதின் விளைவாக அன்றாடம் மக்கள் உபயோகிக்கும் சிறுபைகள் முதல் அத்தியாவசிய பொருட்கள் எடுத்துச் செல்லும் பைகள் வரை மாற்று முறையில் விற்பனைக்குண்டானதில் சணல் தயாரிப்புகளும் ஒன்று.

அழிந்து வரும் சணல் பயிரிடும் தொழிலை பாதுகாக்கவும் இச்செயல் உதவும் வேளையில் முழுமையான 100% நெகிழி ஒழிப்புக்கு மாற்றாக இன்று சணல் பைகள் உபயோகமாகின்றன.

திருமண தாம்பூல பை வழங்கியவர்கள் சணல் பை வழங்கியதைக் கண்ட தனது தாய் இயல்பாக வணிக பணிகளில் ஈடுபட்டு வரும் குடும்பமாதலால் நாமும் தயாரிக்கலாமே என எண்ணி தாயார் துவக்கியதும் சணல் பைகள் தயாரிப்பு தயாரிக்கப்பட்ட சணல் பைகளை விற்பனை செய்வதற்கு தினசரி நடைபயிற்சி செய்யுமிடத்தில் துவக்கி மக்கள் விரும்பும் தன்மை

அறிந்து அதற்கேற்றாற்போல் சணல் பைகளின் ரகங்களை ஆராய்ந்து தைத்து விற்பனையில் முன்னணியில் நின்று சாதனையாளராக விளங்குகிறார்.

விற்பனை மட்டுமல்ல, பிறரும் இதைத் தயாரித்து விற்கும் வணிகம் தொழில் தொடங்கும் ஆவலை ஏற்படுத்தும் வண்ணம் மூலம் பொருட்கள் எங்கெல்லாம் கிடைக்கும், எவ்வளவு செலவாகும், எத்தனை தையற் கலைஞர்கள் உபயோகப்படுத்தி தைக்கலாம் எவ்வளவு லாபம் தரும் என பட்டவர்த்தனமாக பலர் அறியும் வகையில் பத்திரிகைகளில் செய்தியாக வரும் அளவிற்கு கூறி தொழில்புரிய ஆவலை ஏற்படுத்தியுள்ளதும் பெருமைக்குரிய ஒன்றாகும்.

குறிப்பாக பெண்கள் இத்தொழிலில் ஈடுபட ஆர்வம் ஏற்படும் அளவில் இவரது செயல்பாடுகள் அமைந்துள்ளது மட்டுமல்ல நெகிழி ஒழிப்புக்கும் முன்னணியாக நிற்பதும் தொழில் வருவாயை ஈட்ட மட்டுமல்ல நாட்டுக்கும் பிறருக்கும் உதவத்தான் என எடுத்துக்காட்டாக திகழும் திருமதி சுஜாதா நாச்சியப்பன் அவரது சமுதாயப் பணியை பாராட்டி **TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மகளிரணி சார்பாக ‘‘சமுதாயப் பணிச் செம்மல் விருது’’ வழங்கி பெருமைப்படுத்துகிறோம்.**

□



## ஷாலினி ஜெரால்ட்

**புரசைவாக்கம், சென்னை**

சென்னையில் தனியார் பள்ளி பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். ஆசிரியப் பணியோடு இறைப்பணியிலும் தம்மை ஈடுபடுத்தி முன்னணியில் நிற்பவர்.

பள்ளி மாணவர்களிடையே தமிழைக் கொண்டு செல்வதில் தனிக்கவனம் செலுத்தி வரும் தமிழார்வலர். சிறந்த ஆசிரியர் பணியை மேற்கொண்டு வருவதோடு சிறந்த எழுத்தாளராகவும், பேச்சாளராகவும், கவிஞராகவும் விளங்கி வருகிறார்.

பட்டிமன்றங்களில் கலந்து முத்திரைப் பதிக்கும் பேச்சாளராக விளங்கி வருகிறார். நூற்றுக்கணக்கான கவியரங்குகளில் கவிதை பாடி பல்வேறு விருதுகளையும், சான்றுகளையும் பெற்றுள்ளார்.

சிறந்த ஆசிரியப் பணிக்கான சமூக நல அமைப்பினால் வழங்கப்பட்ட நல்லாசிரியர் விருதினை பெற்றவர்.

சிறந்த நூல்களை படைத்திடும் ஆர்வமோடு எழுத்தாளராகவும் உயர்ந்திருக்கிறார்.

செல்லும் இடங்களிலெல்லாம் தமிழை உயர்த்தி பிடிப்பதில் தலைசிறந்து விளங்கும் திருமதி. ஷாலினி ஜெரால்ட் அவர்களை, **TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மகளிரணி சார்பில் 2020 மகளிர் தின விழாவில் ''தமிழ்ப் பணிச் செம்மல் விருது'' விருது வழங்கி பெருமைப்படுத்துகிறோம்.**

□



## மெய்ஸ்ரீ .P.S

**பட்டணம், கோயம்புத்தூர் மாவட்டம்.**

**கோ**யம்புத்தூர், பட்டணம் என்ற இடத்தைச் சேர்ந்தவர். தந்தையார் திரு. P. செந்தில்குமார் பொறிஞராகவும் தாயார் V. புஷ்பலதா தலைமை ஆசிரியையாகவும் பணியாற்றுகிறார்கள்.

மழலைப் பருவத்திலேயே பேச்சில் வல்லமை மிக்கவராக திகழ்ந்தவர் தனது 4வது வயதிலேயே மேடைப் பேச்சுகளில் பயணிக்க தொடங்கினவராம்.

பள்ளி கல்லூரி காலங்களில் மேடைப் பேச்சுகளில் முதல் பரிசினையே பெறும் மாணவியாக திகழ்ந்துள்ளார்.

அகட விகடம், யாவரும் கேளீர், இது உங்கள் மேடை போன்ற தொலைக்காட்சி பேச்சரங்கங்கள், ராஜ் டிவி, புதுயுகம், வேந்தர் டிவி, விஜய் டிவி, வசந்த் டிவி, பாலிமர் டிவி, பொதிகை போன்ற தொலைக்காட்சிகளில் பட்டிமன்றத்தில் கலந்து கொண்டுள்ளதோடு புஷ்பவனம் குப்புசாமி, சபரிமாலா ஜெயகாந்தன், திருப்பூர் கிருஷ்ணன், மதுரை முத்து, நடிகை கஸ்தூரி, ஞானசம்பந்தன், ஆதிபாண்டியன், புதுக்கோட்டை மகாராஜன், திருச்சி நந்தலாலா போன்ற நடுவர்களின் தலைமையிலும் பட்டிமன்றத்தில் பேசியுள்ளார்.

2017ம் ஆண்டில் ஏற்காடு கோடை விழாவில் தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் முன் பட்டிமன்றத்தில் பேசியுள்ளார்.

பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள மெய்ஸ்ரீயை கவிப்பேரரசு வைரமுத்து, சிற்பி பாலசுப்ரமணியன் போன்றவர்கள் பாராட்டி பேசியுள்ளனர்.

பேச்சரங்கம், பட்டிமன்றம், தனிச் சொற்பொழிவுகள், ஆன்மீகச் சொற்பொழிவுகள் என தனது பேச்சால் தமிழை முன்னெடுத்துச் செல்லும் சாதனையாளர் பிற துறைகளில் சிறந்து விளங்குகிறார்.

குறிப்பாக பரதக் கலையை 15 ஆண்டுகளாக பயின்று பரத நாட்டியம், ஆடுவதில் மலேசியா நாட்டில் பத்துமலை முருகன் ஆலயத்தில் பரத நாட்டியம் நிகழ்த்தியுள்ளார்.

ஒயிலாட்டம் கற்று அரங்கேற்றம் செய்ததுடன் இலங்கையில் 4ம் உலக பக்தர் மாநாட்டில் ஒயிலாட்டம் நிகழ்த்தியுள்ளார்.

கர்நாடக சங்கீதம் முறையாக கற்றுள்ளதுடன் சிறந்த பாடகராகவும் விளங்குகிறார்.

பொதிகை டிவியிலும், ரெயின்போ பண்பலையிலும் பணியாற்றி வருகிறார். பல்துறைகளிலும் சிறந்து விளங்கி இயல், இசை, நாடகம் என முத்தமிழுக்கும் பெருமைச் சேர்த்து வருவதைப் பாராட்டி **TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மகளிரணியின் சார்பாக 2020 மகளிர் தினத்தில் "இளம் சாதனையாளர் விருது" வழங்கி பெருமைப்படுத்துகிறோம்.**

□

திருமதி. **கவிதா**
**உதவி மின்பொறியாளர்**
இ/ப/ கூடுவாஞ்சேரி நகரம்
செங்கை மின்பகிர்மான வட்டம்



உலகை நகர்த்தும்
இயற்கை கடிகாரம்
பெண்களே!

தேன் போன்று இனிமையானவள் தான் பெண்...
அவள் மருந்தான போதிலும்

சாதனைகளோடு சரித்திரம் படைக்க கடவுளால்
படைக்கப்பட்ட கற்பகவிருட்சம் தான் பெண் என்பவள்

சிறகுகளை தானாக பெற்று பறவையால்
வாழ்கிறவளே பெண் மட்டும் தான்

அன்னையும் பெண்ணே சகோதரியும் பெண்ணே
தோழியும் பெண்ணே காதலியும் பெண்ணே
மனைவியும் பெண்ணே மகளும் பெண்ணே
உலகில் உள்ள அனைத்து உறவுகளும்
பெண்கள் தொடுத்தவையே...

நிலவு இல்லையெனில் வானுக்கு பெறுமதியில்லை
மலர்கள் இல்லையெனில் மரத்திற்கு பெறுமதியில்லை
அம்மா இல்லையெனில் பாசத்திற்கு பெறுமதியில்லை
பெண்மை இனம் இல்லாவிட்டால் உலகிலும் உயிர்கள் இல்லை

பெண் ஒரு செல்ல குழந்தை
பெண் ஒரு இனிமையான தங்கை/அக்கா
பெண் ஒரு அன்பான காதலி
பெண் ஒரு ஆசைக்குரிய மனைவி
பெண் ஒரு வலிமையான தாய்
எதையும் தாங்கும் இதயம் படைத்தவள் பெண்ணே...

□

# மகளிரணி மாநில நிர்வாகிகள்



**M. பாரதி**

நிர்வாக மேற்பார்வையாளர்
தலைமைப் பொறியாளர் அலுவலகம்,
கோவை



**P. தமிழரசி**

கணக்கீட்டு அலுவலர்
செயற்பொறியாளர் அலுவலகம்,
சமயநல்லூர், மதுரை மின்வட்டம்.



**P. பானுமதி**

கள உதவியாளர்
செயற்பொறியாளர் அலுவலகம், வியாசர்பாடி
சென்னை வடக்கு மின் வட்டம்



**V. பாரதி**

உதவி செயற் பொறியாளர்
கடலங்குடி 230 KV துணை மின்நிலையம்,
நாகப்பட்டினம் மின் வட்டம்

# மகளிரணி சிறகுகள்



**S. Muthamil Selvi**
Tester Chemical,
MTPS



**A. Shanthi**
Asst. (Accounts)
Thiruvannamalai EDC



**B. Basilloth Begam**
Assessor,
Chengalpattu EDC



**G. Kavitha**
Junior Engineer
Coimbatore South EDC



**K. Chitra Selvei**
Asst. (Administration)
Virudhunagar EDC



**L. Malathi**
Assessor,
Theni EDC



**M. Sowmiya**
Revenue Supervisor,
Chengalpattu EDC



**A. Dhanalakshmi**
Field Assistant,
Madurai EDC



**P. Krishnaveni**
OH
Dharmapuri EDC

# மகளிரணி சிறகுகள்



**S. Karthika**
Commercial Assistant,
Chennai Central EDC



**M. Bhakkiyam**
Commercial Inspector,
Gobi EDC



**R. Una**
Revenue Supervisor,
Thiruvarur EDC



**G. Pattu**
Field Assistant,
Chennai south 2 EDC



**B. Jothi**
Record Clerk,
TTPS



**N. Kalaiselvi**
Inspector of Assessment,
Madurai Metro EDC



**P. Anitha**
Assessor,
Chennai South 1 EDC



**T. Sasikala**
Accounts Supervisor,
Udumalaipet EDC



**S. Chitra Devi**
Commercial Asssitant,
Mettur EDC

# மகளிரணி சிறகுகள்



**C. Kannagi**
Asssitant (Administration),
Coimbatore GCC



**M. Savithiri**
Field Asssitant,
Udumalaipet NCES



**M. Kavitha**
Line Inspector,
Coimbatore Metro EDC



**M. Josephin Rani**
Asssisant Accounts,
Coimbatore South EDC



**R. Radhika**
Assistant (Administration)
Nagapattinam EDC



**L. Hepzibha**
Assistant (Administration)
Coimbabtore North EDC



**S. Sudha**
Assessor,
Palladam EDC



**E. Mohanapriya**
Commercial Assistant,
Thirupur EDC



**V. Sivarani**
Commercial Assistant,
Salem EDC

# மகளிரணி சிறகுகள்



**S. Kangavalli**
Chennai North EDC



**N. Anthony Latha**
Assessor,
Chennai North EDC



**P. Thamarai Selvi**
Assistant Engineer,
Chennai Development Circle



**K. Devika**
Assistant Engineer,
Chennai Development Circle



**M. Kavitha**
Accounts Supervisor,
Madurai Metro EDC



**S. Lalitha**
Accounts Supervisor,
Madurai Metro EDC



**A. Shanthi Kala Mary**
Assistant (Accounts)
Mdurai Metro EDC



**S. Bhuvaneswari**
Technical Assistant
SLDC, Chennai



**N. Shanthi**
Commercial Assistant
Chennai North EDC

## மகளிரணி சிறகுகள்



**Mangai**
CHD Head Quarters
Chennai



**Esther Rani**
Junior Engineer
Cuddalore EDC



**E. Rasaselvam**
Thirunelveli EDC



**Vigneshwari**
Kancheepuram EDC



**Saheera**
Administrative Assistant,
Mettur EDC



**Anbudevi**
Commercial Assistant
Villupuram EDC


உலக மகளிர் தினத்தில்
மகளிர் அனைவருக்கும்
இதயம் கனிந்த நல்வாழ்த்துகள்!

அன்புடன்
**மகளிரணி மாநில, திட்ட நிர்வாகிகள்**

**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன்**
39/101, சிங்கண்ண தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 2.
✆ : 9841446621 Whatsapp : 9092268200
tnebemployeesfederation3600@gmail.com ● website : www.tnebfederation.org

# ‘பெண்கள் தினம்’ சொல்லும் செய்தி என்ன?

– திருமதி. **C. கண்ணகி,** இணைச் செயலாளர், கோவை GCC

**உ**டலுறுதி கொண்ட ஆணைவிட மன உறுதி கொண்ட பெண் சிறப்பு மிக்கவள். தாயாக, மகளாக என்று நம் உறவின் அனைத்து பகுதிகளிலும் நீக்கமற நிறைந்திருப்பவர்கள் பெண்கள் ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள் என்று கூறப்படுவது இதனால்தான்,

தற்சமயம் உலகம் முழுவதிலும் கொண்டாடப்படும் மகளிர் தினம் சர்வதேச மகளிர் தினமாக அதிகார பூர்வமாக அறிவிக்கப் பட்ட தினம் மார்ச் 18, 1911 ஆகவே மகளிர் தினம் கொண்டாட ஆரம்பித்து இந்த வருடத்துடன் 106 ஆண்டுகள் முடிந்துவிட்டன. பிரஞ்சு புரட்சியின் போதே பெண்கள் தங்களுக்கும், ஆண்களுக்குச் சமமான சுதந்திரம், சம உரிமை அரசனது ஆலோசனைக் குழுமங்களில் பிரதிநிதித்துவம் கேட்டு போராட்டத்தில் இறங்கினர். 8 மணி நேர வேலை, வேலைக்கு தகுந்த கூலி அரசியலில் வாக்குரிமை ஆகியவையும் அவர்களது புரட்சி செயல்பாட்டில் பட்டியலிடப்பட்டன. அப்போது ஆரம்பித்த இந்த போராட்டங்கள் 19ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் மெல்ல மெல்ல உலகம் முழுவதும் பரவி பெண்களிடையே ஒரு குறிப் பிடத்தக்க அசாதாரண விழிப்புணர்வை ஏற்படுத்த ஆரம்பித்தன. பெண்கள் தங்கள் பலம் என்னவென்று உணரத் தொடங்கினர். பெண் ணடிமை, பெண்களை இழிவுபடுத்துதல் பெண்களை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்துதல், பெண் என்பதால் அவளை ஒதுக்குதல் ஆகிய சமுதாய போக்குகளுக்கு எதிராகவே இந்தப் போராட்டங்கள் நடந்தன. இந்தப் போராட்டங்களின் வெற்றியாய் உதித்ததே சர்வதேச பெண்கள் தினம். 1913ம் வருடம் முதல் மார்ச் 8 சர்வதேச மகளிர் தினமாக உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

வேற்றுமையில் ஒற்றுமை காணலாம் என்பதற்கு நம் இந்திய நாட்டை உதாரணமாக சொல்லலாம் பலவித மனம் மற்றும் பலவித பூக்களால் தொடுக்கப்பட்ட கதம்ப மாலையாக நம் பாரதம் உள்ளது. பாரதத்தில் மங்கையரும் பலவிதமான மலர்களே அவைகள் பூத்துக் காயாகி கனியாகி பக்குவமடைகிறது. அந்த கதம்ப மாலையை இணைக்கும் நூலாக தியாகம் உள்ளது. தியாகமே பாரதத்தில்

பெண்கள் பலவித முறைகளில் ஆடை ஆபரணங்கள் அணிந் தாலும், பல மொழிகளில் பேசினாலும் ஆதார சுருதியாக ஒளிக்கும் நாதம் தியாகம் ஒன்றுதான்.

## பெண்களின் இன்றைய நிலை

ஒருபுறம் பெண் சிசு கொலை நடந்து கொண்டிருக்கும் இன்னொரு புறத்தில் ஏதோ ஒரு வெளிநாட்டில் இந்திய பெண்கள் வெற்றிக்கனி பரிந்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பெண் பிரதமர், ஒரு பெண் ஜனாதிபதி, ஒரு பெண் சபாநாயகர் பல பெண் முதலமைச்சர்கள், பெண் விளையாட்டு வீரர்கள், விண்வெளி வீராங்கனைகள் என்று உலகம் பெருமைப்பட சொல்லிக் கொண் டாலும் பெண்களின் நிலை சொல்லிக் கொள்ளும் அளவிற்கு பசுமையானதாக இல்லை. பாலியல் கொடுமைகளுக்கு ஆளாகும் பெண்கள் பலர் சமுதாயத் தின் ''தீ'' நாக்குரைக்கு பயந்து கொண்டு தங்கள் துயரங்களை, அவமானங்களை வெளியில் சொல்லாமல் மறைத்து வைத்து மன அமைதியை தொலைத்துவிட்டு வாழ்ந்து வருகிறார்கள். ஆளும் நாற்காலியில் அமர்ந்திருப்பவர்களும் நீதிமன்றங்களும் வாய்மொழி காப்பார்கள். இந்த நிலை தற்போது மெல்ல மெல்ல கடந்து வெளிஉலகிற்கு தங்களை அடையாளம் காட்டி வருகின்றனர்.

## பெண்கள் தினம் சொல்லும் செய்தி என்ன?

பெண்ணுரிமைக்காக போராடிய போராளிகளைப் பற்றியும் பெண்கள் மேல் குணத்துடன் கட்டியமைத்த இயக்கங்கள் பற்றியும் இந்நாள் நன்றியுடன் நினைத்து சிறப்பு செய்ய வேண்டும். அன்பிற்கடையாளமாவும், தெய்வங்களாகவும் தெய்வத்தன்மை சூட்டப்பட்டாலும் பெண் சமூகத்தை மிகவும் கீழான நிலையிலேயே இந்திய சமூகம் வைத்திருக்கிறது என்பது வரலாற்று உண்மை.

கல்வி வாய்ப்புகளும், வேலை வாய்ப்புகளம் ஏற்படுத்திய பொருளாதார சுதந்திரமும் பெண்களிடையே பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது. பெண்களுக்கெதிரான கொடுமைகளை கண்டு அயர்ந்து போகாமல் எதிர்த்து நின்று பிரகாசிக்கும் என்பது தான் இந்த ஆண்டு மகளிர் தினத்தில் பெண்களாகிய நாம் இந்த உலகத்திற்கும் இந்த சமுதாயத்திற்கும் தெரிவிக்கும் செய்தி.

பெண்ணே நீ உனக்கென வாழ்வது எப்போது?
உண்மையான மாற்றம் வரும் அப்போது!

# பள்ளியில் ஒலிக்கும் பறையிசை..!

'**த** தகுகுதகுதகு!' கோவை பீளமேடு தண்ணீர் பந்தல் சாலையில் இருக்கும் ஸ்ரீராமன் செட்டியார் மெட்ரிக் பள்ளி வளாகத்திலிருந்து அதிர அதிர ஒலிக்கிறது பறையிசை. விடுமுறை நாளின் சோம்பல்தட்டிய மனநிலையுடன் அந்தப்பகுதியைக் கடப்பவர்களையும் தொற்றிக் கொள்கிறது அந்த அதிர்வு. பள்ளி வளாகத்தில் எட்டிப்பார்த்தால், மூன்று வயது சிறுவர் - சிறுமியர் முதல், நடுத்தர வயது பெண்கள் வரை பலர் பறையடித்து உற்சாகமாக ஆடிக்கொண்டிருக்கிறார்கள்.

கலைக்கூடம்

ஞாட்பன் சிவா
✆ : 9944952893

அதிரவைக்கும் பறையிசையை முழக்கியபடி, அடவுகளில் அசத்திக் கொண்டிருந்த லதா, அந்தப்பள்ளியின் முதல்வர் என்பதுதான் ஆச்சரியம். அவரிடமே அதைப்பற்றிக் கேட்டேன். ஆடிய களைப்பின் சுவடே இல்லாமல் பேசத் தொடங்குகிறார். எனக்கு சின்ன வயசிலயிருந்தே கலைத்திறன்கள் மேல ஒரு காதல். கராத்தே, சிலம்பமும் கத்திருக்கேன். பள்ளிப் படிப்பைத் தாண்டியும் கலைத்திறன்கள்ல மாணவர்கள் ஜொலிக்கணும்னு எப்பவுமே நினைப்பேன். இங்கே பறையிசை பயிற்சி கொடுக்க இடம் கிடைக்குமான்னு 'நிகர்' பறையிசைக் கலைக்குழு என்கிட்ட கேட்டாங்க. நான் உடனே, எங்கஸ்கூல் மேனேஜிங் டிரஸ்ட்டிகிட்ட பேசினேன். அவர், உடனே ஓகே சொல்லிட்டார். எங்கஸ் கூல் பிள்ளைங்க மட்டுமல்ல, கோவை, திருப்பூர், நாமக்கல், கரூர், புதுச்சேரின்னு பல இடங்கள்லருந்து பிள்ளைகள் இங்க வந்து கத்துக்குறாங்க. நானும் ஒருமாணவியா இருந்து இதைக் கத்துகிட்டேன் என்கிறார் லதா பெருமிதத்துடன்.

தமிழ்ச்சமூகத்தின் அடையாளங்களில் ஒன்றான பறை யிசையைப் பள்ளிகளுக்கு அறிமுகம் செய்யும் பணியில் ஈடு பட்டிருக்கும்' நிகர்' பறையிசைக்கலைக்குழுவின் ஒருங் கிணைப்பாளர் ஸ்ரீயிடம் பேசினேன்.

பொதுவா வீணை, மிருதங்கம், புல்லாங்குழல் மாதிரியான இசைக்கருவிகள் வாசிக்கும் பயிற்சிக்குப் பள்ளிகள்ல உடனே

அனுமதி கிடைச்சுடும். ஆனா, பறையிசைன்னா அனுமதி மறுத்துடுவாங்க. சாவுக்கு இசைக்கிற அமங்கல வாத்தியமாத்தான் பறையிசையைப் பார்க்கிறாங்க. கொட்டுச் சத்தம் தொந்தரவா இருக்கும்னு நிறைய பேர் நினைக்கிறாங்க. இந்த மாதிரியான ஒரு அவலச்சூழல்ல, பள்ளிகள்ல பறையிசையைக் கத்துக் கொடுக்க முடியும்கிற நம்பிக்கையை விதைச்சதுக்காகவே ஸ்ரீராமன் செட்டியார் மெட்ரிக் பள்ளி நிர்வாகத்துக்கு நன்றி சொல் லணும். அதுவும் இந்தப்பள்ளியின் முதல்வரே பறையிசையைக் கத்துகிட்டது எங்களுக்கு இன்னொருபலம் என்கிறார் .

பறையிசைக்குக் காட்டப்படும் பாரபட்சம் பற்றி மேலும் விரிவாகப் பேசுகிறார் இந்தக்குழுவைச் சேர்ந்த சிவா. எல்லா இசைக்கல்லூரிகள்லயும்மற்ற இசைக்கருவிகள் கூட பறையிசைக் கருவியும் வரைஞ்சி வச்சிருப்பாங்க. ஆனா, உள்ளே போய்ப் பார்த்தாத வில், வீணை, மிருதங்கம் எல்லாம் இருக்கும். பறை மட்டும் இருக்காது. கேட்டா, பறைக்குன்னு இசைக் குறிப்பே இல்லைம்பாங்க. உண்மையில, தமிழ்நாடு முழுக்க ஒவ்வொரு பறையிசைக் குழுவும் வெவ்வேற இசைக்குறிப்புகள் வச்சிருக்காங்க. அதையெல்லாம் ஒருங்கிணைச்சு ஒருபொதுவான இசைக்குறிப்பை உருவாக்க யாருமே தயாரா இல்ல. ஆதி மனிதனின் இசைக்கருவின்னு பெருமையா இதைச் சொல்லிக் குவாங்க. ஆனா, யாரும் இதை முன்னெடுக்க வரமாட்டாங்க. ஏன்னா, இதுக்கு ஒரு சாதி அடையாளத்தை உருவாக்கிட்டாங்க. சாவுக்கு மட்டும் பயன்படுத்துற நிலைக்குக்கொண்டு வந்துட் டாங்க. அதை உடைக்கிறதுதான் எங்களோட முதல் நோக்கம் என்கிறார் சிவா.





இதுவரை 50 நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கும் இக்குழு, பறையிசைப் பயிற்சிக்கான சான்றிதழ் வகுப்புகளைக் கடந்த நவம்பர் முதல் நடத்தி வருகிறது. சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்கள் அடிப்படைப் பயிற்சி வழங்கப்படுகிறது. இதுவரை எட்டுப் பயிற்சி முகாம்களை நடத்தியிருக்கும் இக்குழுவிடம் முந்நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பயிற்சிபெற்றிருக்கிறார்கள். பங்களிப்புக் கட்டணமாக 300 ரூபாய் மட்டும் வசூலிக்கப் படுகிறது. உணவு உள்ளிட்ட செலவும் இதில் அடக்கம். குழுவில் மொத்தம் 12 பேர் உள்ளனர். வேதியியியலில் முனைவர்பட்ட ஆய்வில் ஈடுபட்டிருக்கும் சந்திரிகா, இந்தியன் வங்கியில் கேன்ட்டீன் நடத்தும் சுரேஷ், பத்தாம் வகுப்பு மாணவரான அஸ்வின், ப்ளஸ்டூ டிக்கும் ஸ்ருதி. பிகாம்., இறுதியாண்டு படிக்கும் ஐஸ்வர்யா என்றுபலரும் இந்தக்குழுவில் மூன்றாண்டு பயற்சி பெற்று பயிற்றுநர்களாக உள்ளார்கள்.

பறையிசையை எங்க ஆசான் கிட்டகத்துக்கும் போதே, ‘தனி மனித ஒழுக்கமில்லாமல், பணத்துக்கோ, மதுவுக்கோ பறையை வாசிக்கமாட்டோம்; பறையை இழிவு செய்ற இடங்கள்ல அதை வாசிக்கமாட்டோம். சாதி எல்லைகளைக் கடந்து மக்களுக்கும் சமுதாயத்துக்கும்தான் பறையைப் பயன்படுத்துவோம்’னு உறுதிமொழி எடுத்துக்கிட்டோம். புதுசா பயிற்சி எடுக்கறவங் களையும் இதே உறுதிமொழியை எடுக்க வைக்கிறோம். தமிழ் நாட்டோட மூலை முடுக்கெல்லாம் பறையிசை ஒலிக்கணும். அதுக்கு பள்ளி, கல்லூரிகள்ல பறைஇசைப் பயிற்சி நடத்துற ஆரோக்கியமான சூழல் உருவாகணும் என்கிறார்கள் ஸ்ரீயும் சிவாவும்.

அந்தச்சூழல் உருவாகட்டும். கடைசித்தமிழனின் காதுக்கும் ஒலிக்கட்டும் இந்த வெற்றிப்பறை!..

**–கா.சு.வேலாயுதன்**

# 2019ஆம் ஆண்டு மகளிர் தின விருதாளர்கள்

## K. பார்வதி மோகன்

முன்னாள் மூலக்கரைப்பட்டி பேரூராட்சி தலைவர்,
திருநெல்வேலி மாவட்டம் "வாழ்நாள் சாதனையாளர் விருது"

## ச. சரஸ்வதி ப்ரியா

தலைமை ஆசிரியை, நாமக்கல் மாவட்டம் "நல்லாசிரியர் விருது"

## M.K. மணிமேகலை

கணித ஆசிரியை, தேனி மாவட்டம் "வாழ்நாள் சாதனையாளர் விருது"

## சக்தி அருளானந்தம்

சமூக சேவகி மற்றும் தமிழ் பற்றாளர்,
சேலம் மாவட்டம் "தமிழ்ப்பணிச் செம்மல் விருது"

## A. சாந்தா

மின்சார வாரிய கணக்கு அலுவலர்,
விருதுநகர் மாவட்டம் "சதுரங்க சாதனையாளர் விருது"

## தேவிபாலா குணசேகரன்

வழக்கறிஞர், விருதுநகர் மாவட்டம் "வாழ்நாள் சாதனையாளர் விருது"

## அம்பிகா குமரன்

கவிஞர் மற்றும் தமிழ் பற்றாளர்,
திருப்பூர் மாவட்டம் "தமிழ்ப்பணிச் செம்மல் விருது"

## ச. உஷா

சமூக ஆர்வலர், தஞ்சாவூர் மாவட்டம் "சமூக ஆர்வலர் விருது"

## K. சாவித்திரி

மின்சார வாரியம் (ஓய்வு)
கோவை மாவட்டம் "வாழ்நாள் சாதனையாளர் விருது"

## K. சுகமதி

தொழிற்சங்க தலைவர்,
நல்லம்பள்ளி வட்டார ஊர்நல அலுவலர்,
தருமபுரி மாவட்டம் "வாழ்நாள் சாதனையாளர் விருது"



# பெண் என்னும் அற்புத ஆலமரம்

வேராய், விழுதாய்!
மண்ணாய் மரமாய்!
மானிடம் வாழ
மாசுகளை சுவாசிப்பவள்!

சுமை என்று தெரிந்தும்
சுகமாய் சுமப்பவள்!
வலி என்று தெரிந்தும்!
வரம் கேட்பாள்!

உயிர் ஒன்று தந்து!
உறவை வளர்ப்பாள்!
உயிரின் பாதி தொலைத்தும்
உலகில் வாழும் அதிசயம் பெண்!

''தேவை'' என்ற வார்த்தையை!
தேவதைகள் உபயோகிப்பதில்லை!

பெற்றோரை பேணி வளர்த்த உறவுகளை!
விட்டுப் பயணிப்பதால் தான்
கங்கை கூட மங்கை பெயர் பூண்டதோ!

ஓயாமல் சுழன்று கொண்டிருப்பது
பூமி மட்டுமல்ல!
உழைக்கும் மகளிரும் தான்!

பறக்கச் சிறகுள் கேட்டோம்!
கிடைத்ததோ கூண்டோடு!
கூடிய சிறகு!

வரும் காலத்தில்!
'வர'தட்சணை கொடுக்க மாட்டோம்!
உங்களுடன் வாழ
எங்களுக்கு வேண்டும்!
''தட்சணை''
அதுவே பெண்மைக்கு ஆண்!
செய்யும் ''லட்சார்ச்சனை!''



ஆக்கம்
**திருமதி. ஆ. தனபாக்கியம்**
கணக்கு மேற்பார்வையாளர்,
நகரியக் கோட்டம்/மாநகர்/கோவை